(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 46.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 மார்ச் 21, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

127/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இதுவரையில் அச்சிடப்பட்டுள்ள நாணயத் தாள்கள் மற்றும் வார்க்கப்பட்டுள்ள நாணயக் குற்றிகளின் பெறுமதி இலங்கை ரூபாவில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் அச்சிடப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அச்சிடப்பட்ட நாணயத் தாள்கள் மற்றும் வார்க்கப்பட்ட நாணயக் குற்றிகளின் வகைகள் மற்றும் அவ் ஒவ்வொரு நாணயத் தாள் மற்றும் நாணயக் குற்றி வகைகளில் அச்சிடப்பட்ட பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வாறு அச்சிடப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளை அச்சிடுவதற்கான அங்கீகாரம் யாரால் வழங்கப்பட்டது என்பதையும்;

(vi) மேற்படி நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் உபயோகிக்கப்பட்ட நோக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்காலத்தில் நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளை அச்சிட எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

191/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனி உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனி உற்பத்தி தொழிற்சாலைகளில் தற்போது விற்பனை செய்ய முடியாத நிலையில் தேங்கிக் கிடக்கும் சீனி மற்றும் எதனோலின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) இலங்கையில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

221/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பாதுகாப்பான முறையில் கர்ப்பத்தை கலைத்தல்" தொடர்பாக 2012 ஆம் ஆண்டு இலங்கையின் சட்ட ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு, "வளமான நாடு-அழகான வாழ்க்கை" என்ற கொள்கை பிரகடனத்தினூடாக முன்வைக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அது தொடர்பான புதிய சட்டங்களை துரிதமாக இயற்றுவதற்கான நடவடிக்கையில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

294/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொடர்ச்சியாக வெள்ளப் பெருக்கு இடர்வரவு காணப்படுகின்ற ஆறுகள் மற்றும் ஓடைகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இன்றளவில் செயற்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தகைய கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களுக்காக நிதி வழங்கிய நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டங்களில் பல்வேறு தடைகள் காரணமாகத் தோல்வியடைந்த கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

305/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள பீடங்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பீடத்திலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) அரசாங்கப் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கான வருடாந்த சராசரிச் செலவு மற்றும் துறைவாரியாக வகைப்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு ஒன்றை பூர்த்திசெய்வதற்கான மொத்தச் செலவு யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iv) இலங்கையிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) ஒவ்வொரு தனியார் பல்கலைக்கழகத்திலும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(vi) தனியார் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கான மொத்தச் செலவு மற்றும் துறைவாரியாக வகைப்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு ஒன்றினை பூர்த்திசெய்வதற்கான மொத்தச் செலவு யாதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்திலும் உள்ள பேராசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தப் பேராசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்தையும் நடாத்துவதற்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள மாணவர் ஒருவருக்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்தினதும் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றினதும் உலகத் தரவரிசைப்படுத்தல் யாதென்பதையும்?

அவர் இச்சபைக்கு மேலும் வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
### பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள், இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளிலிருந்தும் 2025 பெப்ரவரி 21 திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபத்தாறாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, மார்ச் 20).

*2.

குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

### தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

“ஒதுக்கீடு” எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படுகின்ற திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

---